1999 ஏப்ரல் 20] [திரு. கே. சுப்பராயன்]

வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கிற அக்கறையோடு மாநில அரசால் Tender விடப்பட்டு 1200-க்கு மேற்பட்ட Tenders பெறப்பட்டு, உடைக்கப்பட்டு அமலாக்கப்பட இருக்கின்ற இந்த இக்கட்டான நிலையில் அந்த டெண்டரை உடைப்பதற்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதாக எனக்குச் செய்தி வந்தது. நான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், உயர் நீதிமன்றத்தின் தார்மீக நெறி எந்த அளவிற்குச் சிறுகச் சிறுக அரிக்கப்பட்டு வருகிறது என்பது கண்டு என்னுடைய வேதனையை நான் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இப்படியொரு வழக்குத் தாக்கலானது பற்றிக்கூட நான் ஆட்சேபிக்கவில்லை. அது அவரவர் மனநிலைக்குத் தக்கபடி அவர்கள் தாக்கலாக்கி இருக்கலாம். ஆனால் அதன்மீது ஒரு வழக்கறிஞர் ஆஜராகி இருக்கிறார். அது அவருடைய தொழில் உரிமை. அவர் ஆஜர் ஆகலாம். அதையும் நான் ஆட்சேபிக்க இயலவில்லை. ** எனவே, நான் மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு நல்ல முயற்சிக்கு உலகில் மிகுந்த முன்னேற்றம் நடந்து கொண்டிருக்கிறபோது அந்த முன்னேற்றத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தமிழகமும் பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட முயற்சிக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து, tender open செய்ய இயலாமல் செய்து இருக்கிறதே, அந்த இடைக்காலத் தடையை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அந்த இடைக்காலத் தடை விதித்தமைக்கு நீதிமன்றம் என்ன காரணத்தைச் சொல்லியிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் 22-4-1999ஆம் நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசின் சார்பில் தமிழகத்தில் எதிர்கால இளைஞர்கள் Computer-கணினிப் பயிற்சி மூலமாக வேலைவாய்ப்புகளை நிரம்பப் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நிதிநிலை அறிக்கையிலே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கின்றோம். 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆவது, 12 ஆவது வகுப்புகளில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், அந்தப் பயிற்சி அளிப்பதற்கு நிறுவனங்கள் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அந்த முயற்சியில்கூட இன்னின்ன நிறுவனங்கள் என்று அரசே குறிப்பிடாமல், ஒப்பந்தப்புள்ளி-tender-கோரப்பட்டு, தகுதியுடைய நிறுவனங்கள் அந்த ஒப்பந்தப் புள்ளிகளிலே கலந்துகொண்டு போட்டியிட்டு, அவர்கள்--நிறுவனங்கள்--மூலமாக இந்தக் கணினிப் பயிற்சியைப் பள்ளிகளிலே தொடங்கலாம் என்கின்ற எண்ணத்தோடு கடந்த 20-3-1999 அன்று ஏடுகளிலே விளம்பரங்கள் செய்யப்பட்டன. அந்த ஒப்பந்தப் புள்ளிகள் 19-4-1999 அன்று திறக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

1,200 மேல்நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக கணினிப் பாடதைத எடுத்துக்கொண்டு, அதிலே வெளிவருகின்ற மாணவர்கள், ஆண்டுதோறும் ஒரு பள்ளிக்கு 40 பேர் என்றால், ஒவ்வொரு ஆண்டும் 48 ஆயிரம் பேர், குறைந்தது 48 ஆயிரம் பேர் software பயிற்சி பெற்றவர்களாக வெளியே வருவார்கள்; வேலைவாய்ப்புக்கு உரியவர்களாக வெளிவருவார்கள் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டு, அதற்கான விளம்பரமும் செய்யப்பட்டு, 19 ஆம் தேதி அந்த ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இடையில் சந்திரவதனம் மற்றும் நான்கு பேர் ஒரு வழக்கை உயர் நீதிமன்றத்திலே தொடுத்து, உயர் நீதிமன்றம் இந்த Tenders-ஐத் திறக்கக்கூடாது என்று இடைக்காலத் தடை விதித்திருப்பதாக, நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிட்ட ** என்கின்ற வழக்கறிஞர் அவர்களே ஒரு தந்தியின் மூலமாக நம்முடைய Elcot நிறுவனத்திற்குச் செய்தியை அனுப்பினார்கள்.

உடனடியாக நீதிமன்றத்தை அணுகி, நீதிபதி முன்னிலையில் தலைமை வழக்கறிஞர், கூடுதல் தலைமை வழக்கறிஞர் இடைக்காலத் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் 22-4-1999ஆம் நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1999 ஏப்ரல் 20] [கலைஞர் மு. கருணாநிதி]

கோரிக்கையை நீதிபதிகள் ஏற்காமல் அரசு பிரதிவாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி, வழக்கை 21 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கின்றார்கள். எனவே, இந்த இடைக்காலத் தடையை நீக்குவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும். இங்கே கேட்டார்கள், என்ன காரணத்தால் இந்த இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது என்று. தடை விதிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தைத் தவிர, வேறு காரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், மனுதாரர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தங்களைப் போன்ற B.Sc., Computer Science படித்த பட்டதாரிகள் இருக்கும்போது, எங்களை விட்டு விட்டு இந்த ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பது நல்லதல்ல, நிறுவனங்களுக்கு அளிக்கக்கூடாது என்பதைப்போலத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவில்லை எனக் கருதுகின்றேன்.

நாமே நேரிடையாக B.Sc., படித்தவர்களை, Computer Science படித்தவர்களை நியமிக்கவில்லை. ஆனால், இந்த ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்று, அதன் மூலமாகக் குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்கள் இந்தப் பணியை ஆற்ற வரும்போது, அவர்கள் இந்த B.Sc., படித்தவர்களையும், Computer Science படித்தவர்களையும் நிச்சயமாக எடுத்துக்கொள்வார்கள். அதிலே இந்த மனுதாரர்களும்கூட இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். அது வேறு விவகாரம். ஆனால், அரசாங்கமே நேரிடையாக எடுத்தால்தான் இவர்களெல்லாம் இந்த மனு போடுவதற்கு, இத்தகைய தடையை வாங்குவதற்குத் தகுதி இருப்பதாக என்னால் கருத முடியும்; ஆனால் நாம் அழைத்திருப்பதோ நிறுவனங்களை. நிறுவனங்கள்தான் இந்தப் பயிற்சி பெற்றவர்களை அமர்த்தி இவற்றைச் செய்ய முடியும்.

முற்பகல் 10-35

நாம் ஏன் நிறுவனங்களை இதிலே அழைத்திருக்கிறோம் என்றால், ஆண்டுக்காண்டு Computer-இலே software முறை மாறக்கூடும். மாறிக்கொண்டே இருக்கிறது. நான் அதை பட்ஜெட்டிலேயே குறிப்பிட்டிருக்கின்றேன். நித்தம் நித்தம் மாறுகின்ற புதுமைகள்--புதுமைகள்கூட நித்தம் நித்தம் மாறும்--என்று குறிப்பிட்டிருக்கின்றேன். இந்த ஆண்டு புதுமையாக நாம் கருதுவது அடுத்த ஆண்டு புதுமையில்லாதவொன்றாக ஆகிவிடும். எனவே, அரசாங்கமே இந்த Computers-ஐ வாங்கினால், அதிக நஷ்டத்திற்கு ஆளாக நேரிடும். எனவே, தனித்தனி நிறுவனங்கள்--மூலமாக இந்தப் பணியைச் செய்யச் சொல்லலாம் என்றுதான் நிறுவனங்களுக்கு

[கலைஞர் மு. கருணாநிதி] [*1999 ஏப்ரல் 20*

நாம் இந்தப் பணியை ஒப்படைப்பதற்காக, இத்தகைய ஒப்பந்தம் பற்றிய விளம்பரத்தைச் செய்தோம். அந்த விளம்பரத்தை வைத்து இதுவரையிலே *1,000* பேர் மனு செய்திருக்கின்றார்கள். நேற்றையதினம் இந்தச் செய்தியைப் படிக்காமல் சில பேர் எங்களைச் சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்து விட்டார்கள். ஏன், இந்த ஒப்பந்தம் இன்றைக்குத் திறப்பதாக இருந்தீர்களே, நாங்களெல்லாம் வந்திருக்கிறோமே, என்ன காரணத்தால் ஒப்பந்தம் திறக்கப்படவில்லை என்று அவர்களெல்லாம் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவ்வளவு வேகமாக என்னால் சொல்ல முடியாது. எப்பொழுதுமே கையிலே இருக்கிற அகப்பையில் உளுந்து இருந்தால் அல்லது பயறு இருந்தால் அல்லது பருப்பு இருந்தால் அதை வேகமாகச் சுழற்ற முடியாது. அது இல்லாத அகப்பையை வேகமாகச் சுழற்றலாம். திரு. சுப்பராயன் அகப்பையிலே உளுந்து இல்லை. ஆகவே, வெறும் அகப்பையை வேகமாகச் சுழற்றுகிறார். என் கையிலே இருக்கிற அகப்பையிலே கொஞ்சம் உளுந்து இருக்கிறது அல்லது பயறு இருக்கிறது. வேகமாகச் சுழற்ற முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆனால், நீதிமன்றங்கள் இதுபோன்ற இடைக்காலத் தடை கொடுக்கிற நேரத்தில், ஒரு நல்ல காரியத்திற்காகச் செய்யப்பட்டுள்ள இந்த அறிவிப்பை, ** ஆனாலும், தொடர்ந்து நாம் மேல்முறையீடு செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான பேரவைத் தீர்மானத்திற்கு உயர்நீதிமன்றம் தடையாணை பிறப்பித்தது குறித்து விவாதிக்கக் கூடுவதாக இருந்த பேரவைத் தலைவர்கள் மாநாடு ஒத்திவைப்பு

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் வழக்கிலே ஏற்கெனவே தாங்கள் அளித்த தீர்ப்பில் இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டுமென்ற வகையில் உத்தரவிட்டீர்கள். அதற்குப் பிறகும்கூட சென்னை உயர் நீதிமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் *22-4-1999* ஆம் நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.